ЯEGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 28உ புதன் (12—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 29உ வியாழன் (13—1—55) [இதழ் 182

## போலீஸ்காரரை கடித்த கிழவி!

கல்கத்தா, ஜன. 10—

கல்கத்தா குண்டா சட்டத்தின்கீழ் வெளியேற்றப்பட்ட ஒரு கிரிமினல் குற்றவாளியைக் கைது செய்ய வந்த போலீஸ்காரர் ஒருவரை அக்குற்றவாளியின் 65 வயதுடைய கிழத் தாயார், அடித்து கடித்தும்விட்டார்.

அக்கிழவி மீது வழக்குத் தொடரப்பட்டு, விசாரித்த மாஜிஸ்திரேட்டால், ஒரு மாத சிறை தண்டனை தரப்பட்டது. குற்றவாளியின் வயதை நினைத்து குறைந்த தண்டனை தரப்பட்டதாக மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார்.

பிள்ளையின் பாசம் பெற்ற கிழத் தாயை சிறைக்குள் அடைத்துவிட்டது.

# தமிழக அரசியலில் ஒரு திருப்பு முனை—

# தி. மு. கழக மாநில மாநாடு

## கருத்துக்களைத் தாருங்கள்—கழகத்தின் ஜனநாயகப் பண்பை வளருங்கள்!

### மதுரை மாவட்ட மாநாட்டில் பொதுச்செயலாளர்

"மதுரை நகரில் சிறப்புடன் நடைபெறும் இந்த மாவட்ட தி. மு. கழக மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன; மதுரை மாநாடு எல்லா வகையிலும் மிகச் சிறப்பான மாநாடாகும்.

"மாவட்டந்தோறும் மாநாடு நடத்தி, பின்னர் மாநில மாநாடு நடத்துவது என்று நமது கழகச் சட்டத்தில் விதி இருக்கிறது; இதுவரை எல்லா மாவட்டங்களும் மாநாடுகள் நடத்தி முடிந்தாயிற்று; அந்த வரிசையில் மதுரை மாநாடுகளே, மாநில மாநாட்டிற்கு முன்பு நடைபெறும் இறுதியான மாவட்ட மாநாடு;

"அடுத்துவரும் ஜூன் மாதத்தில் மாநில மாநாடு நடத்தப்பட இருக்கிறது.

"மதுரையில் மாநாடா? இந்த நேரத்திலா? வெற்றிகரமாக நடைபெறுமா?—என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது; ஆனல், இந்த இரு நாட்களாக வெகு அமைதியுடன் சிறப்புற மாநாடுகள் நடைபெற்று முடிவுற்றிருக்கின்றன. இந்த மாநாட்டின் மகத்தான வெற்றியைக் காட்டி, 'மாநில மாநாட்டை இங்கேயே நடத்த வேண்டும்,' என்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

"திருச்சியில் மாநில மாநாடு நடைபெற வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம், அது தமிழகத்தின் மத்தியில், எல்லோரும் கலந்து கொள்வதற்கு வசதியாய் இருப்பதாலேயேதான்.

"இங்கேயே மாநில மாநாட்டினை நடத்தினுல் நீங்களெல்லோரும் எவ்வளவு உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பணிபுரிவீர்களோ, அவ்வளவு ஊக்கமாகவும், உற்சாகமாகவும், திருச்சியில் மாநில மாநாடு நடைபெறும்போது நீங்கள் பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாடு, தமிழ்நாட்டு அரசியலில் மகத்தானதோர் மாறுதலை உண்டு பண்ணவிருக்கிறது. எதிர்காலத்தில், தி. மு. கழகம், நாட்டின் அரசியலில் எத்தகைய பங்கைப் பெற வேண்டும் என்பது அந்த மாநில மாநாட்டில் தீர்மானிக்கப்படவிருக்கிறது. அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட வேண்டும் என்று கருதுகிற கருத்துக்களைத் தோழர்கள் ஒவ்வொருவரும் தயக்கமின்றிக் கூற வேண்டும்.

"மற்ற எல்லாக் கட்சிகளுக்கும், தலைவர்களிடமிருந்து உத்தரவு வரும்; தோழர்கள் பின்பற்றுவர்; உத்தரவுப்படி நடப்பர். ஆனல், தி. மு. கழகம் அத்தகைய கழகமல்ல; நமது கழகத்தில் வளர்ந்துள்ள குடும்பப் பாசமும், தலைசிறந்த பண்பும்தான் நல்ல ஜனநாயகத்திற்கு அடிப்படையாகும்; அந்த அடிப்படையில், தோழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் எண்ணங்களை—உள்ளக்கிடக்கைகளைத் தெளிவாக எடுத்துக்கூற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் அந்த உரிமை உண்டு.

"காங்கிரஸ் கட்சியினர், இன்று 'நேருவுக்குப் பிறகு யார்?' என்ற கேள்விக்கு விடைகாண இயலாது வருந்துகிருர்கள். நேருவே ஒரு முறை, புனைப்பெயரில், தான் எழுதிய கட்டுரை ஒன்றில், 'நேருவை, ஜூலியஸ் சீசரைப் போல் ஒரு சர்வாதிகாரியாக்கினுல் அது நேருவுக்கும் நல்லதல்ல; நாட்டிற்கும் நல்லதல்ல,' என்று கூறியிருக்கிருர்.

"காங்கிரஸ்காரர்கள் கோபப்படாமல், ஆத்திரப்படாமல் எண்ணிப் பார்ப்பார்களேயானல், 'நேருவுக்குப் பின் யார்?' என்ற கேள்விக்குள்ள உண்மையான பொருள் விளங்கிவிடும்.

"ஆகவேதான், கழகத்தில் நல்ல ஜனநாயக மணம் கமழ உதவும் வகையில் தோழர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூற வேண்டுகிறேன்.

"கடந்த ஆண்டில் நாம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது நாங்கள் எல்லாம் கைது செய்யப்படாமலிருந்திருந்தால் கூட தோழர்கள் அத்தனை வெற்றிகரமாக போராட்டத்தினை நடத்தியிருப்பார்களோ என்னவோ? போராட்டங்களின்போது கழகத் தோழர்களிடம் இருந்த நெஞ்சுத் துணிவும், நேர்மைத் திறனும் பாராட்டுதலுக்குரியவையாகும். அந்த உறுதியான சக்தி ஜனநாயக உணர்ச்சி கொண்டதாயிருக்க வேண்டும்.

"ஒவ்வொரு சாதாரண உறுப்பினர்களும், மாநில மாநாட்டின் போது தங்கள் கருத்துக்களை அளிக்க வேண்டும்.

"மாநில மாநாடு துவங்க, நீங்கள் காசுகளை மட்டும் தாருங்கள் என்று கேட்க மாட்டேன்; கருத்துக்களையும் தாருங்கள் என்று கேட்கிறேன்."

—என்று பொதுச்செயலாளர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசுகையில், காமராசருக்கும்—கழகத்துக்கும் ஏதோ இரகசிய உடன்படிக்கை இருப்பதாகக் கணித்துத் திரிவோருக்குப் பதில் தந்தார்.

தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"ஆச்சாரியார் ஆட்சிபீடத்தில் நுழைந்தபோது, நாம் ஆச்சரியப்படவில்லை; அவர் ஆட்சியில், திராவிடருக்கு ஏதேனும் தீங்கு செய்வார் என்பதை நாம் நன்ருக அறிந்திருந்தோம்; அவர் கல்வித் திட்டத்தைப் புகுத்தியபோதும் நாம் திகைக்கவில்லை.

ஆனல், காமராசர் முதன் மந்திரியானுர்; ஆச்சாரியார் கல்வித் திட்டத்தினைக் கைவிட்டுவிட்டதின் மூலம் நாட்டு மக்களின் எண்ணத்திற்கு மதிப்பளித்தார் என்று மகிழ்ந்தோம்; பாசத்தையும், நேசத்தையும் காட்டினர் நாட்டவர்; அந்த நிலைமையில், காமராசரின் ஆட்சி நாட்டவருக்கு ஒரு துளி ஏமாற்றத்தை அளித்தாலும் நாட்டவர் திகைப்பார்கள்—ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள இயலாதவர்களாயிருப்பர் என்பதை காமராசர் அறிந்துகொள்ள வேண்டும்.

#### நல்ல வாய்ப்பு

காமராசருக்கு இப்போது ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது; இந்த மாதத்தில் ஆவடியில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடைபெறவிருக்கிறது. அங்கு பெரிய பெரிய தலைவர்கள் வரவிருக்கிருர்கள்; பெரிய பெரிய பிரச்சினைகள் அங்கு பேசப்படவிருக்கின்றன.

#### துபால்காரராகவாவது பணிபுரிவாரா?

அந்தப் பெரிய தலைவர்களுக்கு திராவிடத்தின் நிலை தெரியாது; அவர்களின் கவனமெல்லாம் பெரும் பிரச்சினைகளில் செலுத்தப்பட்டிருக்கும். அந்தப் பெரிய தலைவர்களுக்கு திராவிடத்தின் இன எழுச்சியை, உரிமைக் கோரிக்கையை எடுத்துக் கூறுவதற்கு, காமராசருக்கு இதைக் காட்டிலும் வேறு நல்ல வாய்ப்பு கிடைக்க முடியாது.

தென்னுட்டின் இன்றைய நிலை குறித்து உரை மறுக்கும் உயர்ந்த தலைவர்களுக்கு, உண்மை நிலையை காமராசர் உணர்த்த வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 'தேநீர்' கடைகளுக்கு எதிராகப் 'புரட்சி?'

சௌராஷ்டிர மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளிலெல்லாம் தேநீர்க் கடைகளை ஒழித்துவிட வேண்டுமென்று மாநிலத்தில் உள்ள எல்லா பஞ்சாயத்துக்களும் திட்டமிட்டு வருகின்றனவாம்.

ஏற்கனவே, மாநில சர்க்கார் உத்தரவுடன், 5 மாவட்டங்களிலுள்ள 64 பஞ்சாயத்துக்கள் இக்கடைகளை தடை செய்துவிட்டிருக்கின்றனவாம்.

கிராம மக்கள் அதிகமாக தேநீர் அருந்துவதால், கிராமப் பொருளாதார நிலை பாதிக்கப்படுவதே இத்தடைகளுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவிலேயே சௌராஷ்டிர மாநிலத்தில்தான் அதிக அளவு தேநீர் அருந்தப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

## நெய்வேலியில் மத்திய அரசாங்கத்திற்குப் பங்கா?

### 'அறவே கூடாது' என்கிருர் மேல் சபை உறுப்பினர்

### அப்படி கூறுவது 'அபசாரம்' என்கிருர் மராமத்து மந்திரி!

"நெய்வேலி திட்டத்தில் மத்திய சர்க்கார் பங்கு பெறக் கூடாது."

"பம்பு செட்டுகளுக்காக வரும் மனுக்களைப் பைசல் செய்வதில் மின்சார—விவசாய இலாகாக்களிடமே ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டியது மிக அவசியமாகும். விவசாயிகள் பம்பு செட்டுகள் அமைத்துக்கொள்ள மத்திய சர்க்கார், விசேட அபிவிருத்தி நிதியிலிருந்து பண உதவி செய்யவேண்டும்,"

என்று, திரு. டி. புருஷோத்தம், எம். எல். ஏ., அவர்கள் கோவூரில் மின்சார வினியோகம் ஆரம்பிக்கப்பட்டதை யொட்டி நடைபெற்ற விழா ஒன்றின்போது கேட்டுக்கொண்டார்.

இந்த விழாவில் கலந்து கொண்ட சென்னை மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் ராஜா, புருஷோத்தமரின் மேற்கண்ட வேண்டுகோளுக்குப் பதில் கூறும் வகையில் பேசியதாவது:—

"'நெய்வேலி திட்டத்தின் வருமானம், மாநில சர்க்காரையே சேரவேண்டும்' என்று கூறுவது, பசு ஒன்றை வாங்குவதற்கு முன்னதாகவே, நெய்யின் விலையை நிர்ணயிப்பது போன்றதாகும்; இத்திட்டத்தைத் தானகவே எடுத்து நடத்த சென்னை சர்க்காரிடம் போதிய பண வசதி கிடையாது. அது மட்டுமல்லாமல், இத்திட்டத்தை, மத்திய சர்க்காரின் திட்டங்களிலொன்ருக மேற்கொள்ளக்கூடாது என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வதும் தவருனதாகும். மாநில சர்க்கார் வேறு, மத்திய சர்க்கார் வேறு என்று பேதப் படுத்திக் காட்டக்கூடாது; நிர்வாக சௌகரியத்திற்காகத்தான் மத்திய, மாநில சர்க்கார்கள் இயங்குகின்றனவேயன்றி, இரண்டு சர்க்கார்களும் பொதுமக்கள் நன்மைக்காகத்தான் பாடுபடுகின்றன."

## ஐ. நா.-வுக்குத்தான் தகவல் தரமுடியுமாம்!

செஞ்சீனவில் சிறைவைக்கப்பட்டுள்ள 11 அமெரிக்க விமானிகளையும் விடுதலை செய்வதற்காகத் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் முடிவு பற்றி ஐ. நா. சபைக்குத்தான் தகவல் கொடுக்க முடியும் என்று ஐ. நா. சபை செயலாளர் ஹாமர்ஸ்க் ஜோயெல்டு கூறியிருக்கிருர்.

## மேற்கு—கிழக்கு ஜெர்மனி இணைப்பு

### நேருவின் மத்தியஸ்தமா?

மேற்கு—கிழக்கு ஜெர்மன் நாடுகளை ஒன்ருக இணைப்பது குறித்து மேற்கத்திய நாடுகளுடன் ரஷ்யா உடன்பாடொன்றைக் காண்பதில் மத்தியஸ்தம் செய்து வைக்க, மேற்கு ஜெர்மனி சோஷியல் டெமாகிரடிக் கட்சியின் தலைவரான டாக்டர் எரிக் ஒலினுர் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரைக் கேட்டுக் கொள்வார் என்று கூறப்படுகிறது. இதுபற்றிப் பேசுவதற்காக நேருவைச் சந்திக்க டாக்டர் ஒலினுர் விரும்புகிருராம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 12—1—1955 புதன்

# பழைய மது— புதிய மொந்தை!

புதிய தொடக்கக் கல்வித் திட்ட நுழைப்பால் பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, ஆரிய இராமனின் அருங்குணங்களை எழுதி மகிழ்வதில் காலங் கழித்துவரும் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், நாகபுரி பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பேசும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார். அவ்வாய்ப்பை விணுக்கிக் கொள்ளாமல் கல்வித்துறையில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் என, கல்வி அளிப்பதைக் குறித்துத் தான் கொண்டுள்ள கருத்துக்களையும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்படி பல்கலைக் கழகம் ஆச்சாரியார் அவர்களுக்கு 'டாக்டர்' என்ற பட்டத்தையும் வழங்கியிருக்கிறது. அதுவுமன்றி, அவரை வரவேற்று உபசரித்த பல்கலைக் கழகத் துணைவேந்தர் டூபே என்பவர், ஆச்சாரியார் அவர்களை மனு—வசிஷ்டர்—சுக்கிரர் — கவுடில்யர்—போஜர் — மத்வாச்சாரியார்—திலகர் — காந்தியார்—போன்றவர்களின் அரசியல் வழி பெற்றிருப்பவர் என பாராட்டியுள்ளார். இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இரு பெரியார்களுடன் ஆச்சாரியார் அவர்களையும் சேர்த்து எண்ணலாமா என்பதில் எவருக்காவது ஐயப்பாடு இருந்தாலும் இருக்கலாமே ஒழிய, மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கூறியதில் ஒருவருக்கும் ஐயமிருக்க முடியாது என்பது நிச்சயம்.

வியாசர் — துரோணாச்சாரியார்—பரசுராமர்— விசுவாமித்திரர்—பராசரர் — யாக்ஞியவல்கியர் — பாணினி — பதஞ்சலி ஆகிய மற்ற ஆரிய ரிஷிகளின் அறநெறிசாரத்தின் வழி வந்த 'உத்தம பார்ப்பனர்' ஆச்சாரியார் என, அவரைக் குறிப்பிடுவது கூட மிக மிகப் பொருத்தமானதேயாகும். நிற்க,

டாக்டர் ஆச்சாரியார் அவர்கள், கல்வித் துறையில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் என அவர் கூறியுள்ள கருத்துக்களை ஆராயப்புகுமுன், அவரை வரவேற்று, அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியபல்கலைக் கழக வேந்தரான டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் குறிப்பிட்ட ஒன்றையும், இங்கு குறிப்பிட வேண்டிய கட்டாயமாகிறது.

டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள், ஐந்து நிமிடம் வட மொழியில் பேசி, "இந்திய மொழிகள் அனைத்திற்கும் பெற்றோர் மொழியாக வட மொழியே இருப்பதால், பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களின் துவக்கம் வட மொழியிலேயே துவங்கப்பட வேண்டும்" என, தனது விருப்பத்தையும் கூறியுள்ளார்.

இதைச் சிறு துரும்பு என்பர் சூதுமதி கொண்ட மேதாவிகள். ஆனால், இதிலுள்ள மொழி வெறியை, அறிவு படைத்தவர் மறக்கத் துணியார்.

இந்தியாவில் வழங்கப் பெறும் மொழிகள் அனைத்துக்கும் சமஸ்கிருதமே மூல மொழி என அவர் கூறுவதே பொருந்தாப் பொய்யுரையாகும். சமஸ்கிருதத்திலிருந்துதான் திராவிட மொழிகள் தோன்றின என எந்த மொழி ஆராய்ச்சியினரும் கூறத்துணியார். உண்மை இவ்வாறு இருக்க, அனைத்து மொழிகளும் வட மொழியிலிருந்துதான் பிறந்தன என டாக்டர் பட்டாபி கூறக் கிளம்பியது, உண்மைக்கு அவர் எவ்வளவு மதிப்பளித்து நடப்பவராக இருக்கிறார் என்பதைத்தான் விளக்குவதாக இருக்கிறது.

ஒரு மொழிக்குள்ள பெருமை, அதிலுள்ள பொருட்செறிவிலும், வழங்கப்படும் விரிவிலுமே அமைந்திருக்கிறது. மொழிகள் அனைத்திற்கும் இது பொது விதி. ஒரு மொழியின் பெருமையைக் காட்டும் இவ்விரு நிலைகளும், ஒரு சில மொழிகளில் கூடியும், வேறு பல மொழிகளில் குறைந்தும், ஒன்றிரண்டு மொழிகளில் அறவே தேய்ந்தும் போயிருக்கின்றன. இறுதியாகக் குறிப்பிட்டுள்ள தேய்ந்த நிலையில் கிடப்பதுதான் டாக்டர் பட்டாபியார் குறிப்பிடும் வட மொழி—சமஸ்கிருதம்!

இன்று மட்டுந்தான், அம் மொழி தேய்ந்து கிடக்கிறது; இதற்குமுன் அது பெரும்பாலான மக்களின் சொல் வழக்கில் இருந்தது என வட மொழியைப் பற்றி உரைப்பதற்கும் வரலாற்றில் இடம் கிடையாது. தோற்றம் முதல் இன்று வரை அம்மொழி மரணப் படுக்கையில்தான் இருந்து வருகிறது.

மொழிகளில், வட மொழி கருவிலேயே 'செத்துப் பிறந்த' குழந்தை. எனவே, மக்களின் வாழ்க்கையில் பயன்படக் கூடிய ஒரு மொழியாக ஆகும் ஆற்றல், அம்மொழியில் இயற்கையிலேயே கிடையாது.

மாடு வாங்க வருபவர், தங்கள் பித்தலாட்டத்தை அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக, மாட்டுத் தரகர்கள் திரை மறைவில் கைகளில் விலையை குறிப்பிட்டுக் கொள்ளுவார்கள். இதுபோன்றே, குறிப்பிட்ட ஒரு மொழி தெரியாத மக்களிடம், தங்கள் மோசடியை மறைப்பதற்காகத் தங்கள் மொழியில் பேசிக் கொள்ளுவது சிலருடைய வழக்கம். கேட்பவர்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு சிலர் 'பரிபாஷை'யிலும் பேசிக் கொள்வார்கள். இதை 'பரிபாஷை' இனத்தைச் சேர்ந்ததுதான் வடமொழி— சமஸ்கிருதம்!

மற்ற மொழிகளுக்கு இல்லாத புனிதம், வடமொழிக்கு இருப்பதாகக்கற்பித்துவைக்கப்பட்டு இருக்கிறது. அது 'தேவபாடை' எனவும் கூறப்பட்டு வருகிறது. இந்த அறியாமையின் காரணமாகத்தான், தமிழ் மக்களின் சடங்குகளில் 'தேவபாடை' புகுந்தது; சிவன் கோயில்களிலும் வடமொழி வாழ்வு பெற்றது!

தமிழர்களின்சடங்குகளிலும் கோயில்களிலும் 'தேவபாடை' பெரும் அளவில் மறைந்து வருகிறது. இத்துறையில் நமது கிளர்ச்சி கணிசமாக வெற்றி பெற்றிருக்கிறது என்பதை ஒருவரும் மறுக்கத் துணியார்.

'தேவபாடை' மக்களுக்குப் பயன்படும் அளவைப்பொறுத்தல்ல, அதைக் கட்டிக் காக்க வேண்டுமெனச் சிலர் பிடிவாதம் பேசுவது. அம்மொழியைத் தங்கள் தாய் மொழியென, குறிப்பிட்ட சிலர் நம்பிக்கொண்டு இருப்பதுதான், அப்பிடிவாதத்திற்குக் காரணமாகும். இவ்வுண்மையை, அக்குறிப்பிட்ட சிலர் வெளிப்படையாக ஒப்புக் கொள்வதில்லை. இருந்தாலும், அம்மொழியின் காப்பில் அவர்கள் அக்கரை காட்டத் தவறுவதில்லை.

வட மொழியைத் தங்கள் தாய் மொழியென நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு அதைபாராட்டுவதற்கும், கட்டி வளர்ப்பதற்கும், பிற மொழியினருக்கு இருப்பதுபோன்றே உரிமை உண்டு. அந்த உரிமையை, அம்மொழியை வளர்ப்பதோடு நிறுத்திக்கொள்வதில்லை. அம்மொழியை பிற மொழியினர் மீது திணிப்பதிலும், அம்மொழியிலிருந்துதான் பிற மொழிகள்எல்லாம் தோன்றின எனக் கூறுவதிலும், அவர்களுக்கு அதிக ஆர்வம் உண்டு. அப்பொழுதுதான் அம் மொழிக்கு பலமான எதிர்ப்பு ஏற்படவும் செய்கிறது. வடமொழி காப்பாளர்களின் இவ்வாக்கிரமிப்பை, 'மொழி வெறி' என்றுதான் கொள்ள வேண்டுமே அல்லாது, 'மொழிப் பற்று' எனக் கொள்வதற்கு இடமில்லை. உண்மை இவ்வாறு இருந்த போதிலும், இவ்வடமொழி வெறியர்கள், அதை நியாயமாக எதிர்க்கும் மற்றவர்களை 'மொழி வெறியர்' என நாகூசாமல் கூறுவர். நிற்க,

சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் வடமொழியை 'தேவபாடை' எனக் கூறி, அதை, பிறமொழியினர் மீது, அம்மொழி வழி வந்தவர் திணித்து வந்தனர். இப்பொழுது 'இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி வட மொழி' என டாக்டர் பட்டாபி சீதாராமையா கூறுவது போன்று கூறி, பிற மொழியினர் மீது செத்த வட மொழியைத் திணிக்க, அவர்கள் முற்படுகின்றனர். அக்கூட்டத்தினருக்குக் காலம்தான் மாறிற்றே அல்லாது, கருத்து மாறவில்லை; அது என்றும் அப்படியே அழுகித்தான் கிடக்கிறது. பழைய மது—புதிய மொந்தை!

---

மத்திய டிராக்டர் நிறுவனம், போபாலில் இதுவரை திருத்திப் பண்படுத்தியுள்ள 'கான்ஸ்' புல் நிறைந்த பிரதேசத்தின் விஸ்தீரணம் 3 லட்சம் ஏக்கர்களுக்கு மேலாகும்.

# குடும்பப் பாசம் வளரும்; ஒழுக்க நிலை உயரும்

## இளங் குற்றவாளிகள் பள்ளியினுல் ஏற்படும் பயன்

### சமூகத்தின் நேர்மை பற்றி மாணிக்கவேலர் கருத்து

திருநெல்வேலி, ஜன. 11—

பல,போர்களில் பிரிட்டிஷ் மக்கள் வெற்றிபெற்றதற்கும், அவர்களிடையே எல்லா துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டதற்கும் காரணமாக இருந்தது பிரிட்டிஷ் மக்களின் ஒழுக்கமேயாகும்,"

—என்று சென்னை ரெவினியூ அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலு நாயகர் பாளையங்கோட்டை இளம் குற்றவாளிகள் பள்ளியின் வெள்ளி விழாவில் பேசுகையில் கூறினர்.

"ஒரு நாட்டின் மக்கள் ஒழுக்கமுடையவர்களாகவும், சுகாதாரத்துடன் வலிமை பெற்றவர்களாகவும் இருந்தால்தான் அந்த நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற முடியும்,"

என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இளம் குற்றவாளிகளின் பள்ளிகள் பற்றிக் குறிப்பிடுகையில், 'அவை, குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதைவிட திருத்துவதையே நோக்கமாகக்கொண்டவை' என்றார்.

"சாதாரண சிறைகளில் கூட இந்த நோக்கமே அதிகமாக வலியுறுத்தப்படுகிறது; இளம் குற்றவாளிகள் இப்பள்ளிகளிலிருந்து வெளியேறியதும், அவர்கள் நல்ல தொழில்களில் ஈடுபட்டு, ஒழுக்கத்துடன், நாட்டின் நல்ல குடி மக்களாக வாழ வேண்டுமென்பது அவசியமாகும்," என்று அமைச்சர் மேலும் கூறினர்.

குழந்தைகளின் மனநிலை பற்றி பேசுகையில் அவர் கூறியதாவது:

"குடி, பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை, தேவையான உணவின்மை இவையெல்லாம், குழந்தைகளின் நடத்தையை நேரடியாகப் பாதிக்கக் கூடியவையாகும்.

திருமணம், பெற்றோரின் பொறுப்புகள், குடும்பத்தின் மதிப்பு இவைகளைப் பற்றிய திட்டங்கள் கல்வி மூலம் போதிக்கப்பட்டால், பெற்றோர்—குழந்தைகளிடையேயுள்ள தொடர்பு வலுப்பட ஏதுவாகும். குழந்தைகளுக்குத் தக்கவாறு பள்ளிகள் அமைய வேண்டுமேயன்றி, பள்ளிகளுக்குத் தக்கவாறு குழந்தைகள் அமைவது கூடாது.

வாழ்க்கையில் கீழ்நிலையிலுள்ளவர்களின் குழந்தைகளுக்கென அதிகமான பள்ளிகள் திறக்கப்பட வேண்டும். சர்க்காருக்கும்—சமுதாயத்திற்கும் இடையே அதிகத் தொடர்பு ஏற்பட்டு, அவற்றின் நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தினுல், இளம் குற்றவாளிகளின் பிரச்சினை குறையும்."

பாளையங்கோட்டையில் உள்ள இளம் குற்றவாளிகளுக்கான பள்ளி 1929-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது; 1943-ல், தஞ்சையில் இருந்த பள்ளியும், இப்பள்ளியுடன் சேர்க்கப்பட்டதாம்; நெருக்கடியைச் சமாளிக்கவே இவ்வாறு செய்யப்பட்டதாம். இப்பள்ளியில், சராசரியாக 640 பேர் இருக்கிறார்களாம்; ஒரு பள்ளியில் 400 பேர்தான் இருக்கலாம் என்றும், ஆகவே, இதுபோன்று இன்னொரு பள்ளியைத் திறப்பது நலம் பயக்கும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

இப்பள்ளியிலுள்ள இளம் குற்றவாளிகளுக்கு அறிவு, ஒழுக்கம், உடற்பயிற்சி, கல்வி, தொழில் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறதாம். இதன் மூலம் இளம் குற்றவாளிகள், போதிய திறமை பெற்று நல்லொழுக்கத்துடன், இப்பள்ளிக்கு வெளியிலுள்ள சமூகத்தில் நல்வாழ்வு நடத்த முடியும் என்று சொல்லப்படுகிறது.

முதல் உதவி, சாரணர் இயக்கம், மதவியல், அறிவியல், பஜனை செய்வது, நாடகம், மதப் பிரச்சினை பற்றிய ஆராய்ச்சி, இவை போன்று இன்னும் பல துறைகளில், இளம் குற்றவாளிகள் பள்ளியில் உள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறதாம்.

# நெய்வேலி நிலக்கரி சுரங்கம்

## தேங்கி நிற்கும் தண்ணீர் வாலாஜா ஏரிக்குச் செல்லும்

சென்னை, ஜன. 10—

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில், பழுப்பு நிலக்கரி மட்டத்தை அடைய இன்னும் 25 அடி ஆழம் தோண்டப்பட வேண்டியிருப்பதாகச் சென்னை மாநில தொழிலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

பழுப்பு நிலக்கரி அடுக்குகளுக்கு அடியில் 60 முதல் 70 அடிகள் வரை தண்ணீர் தேங்கி நிற்கலாமெனவும், பழுப்பு நிலக்கரியைத தோண்டி எடுக்கும்போதே அத் தண்ணீரையும் வெளியேஇறைத்து விடுவதற்கு அயல் நாடுகளிலிருந்து 'டிரில்' பம்பு கருவிகள் வரவழைக்கப்பட வேண்டுமெனவும், இறைக்கப்படுகின்ற தண்ணீரையெல்லாம் வாலாஜா ஏரிக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதென்றும், ஒவ்வொன்றும் 2,000 காலன் தண்ணீரை இறைக்கக் கூடிய 6 பம்பு செட்டுகள் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர், மேலும் தெரிவித்திருக்கிறார்.

# விலைவாசிகள் சரிவு!

## இந்திய சர்க்கார் நிலைமை

தானியப் பொருட்களின் விலைவாசிகளையெல்லாம் தடுத்து நிறுத்துவதுடன், அவற்றின் விலைவாசிகளையெல்லாம் ஒருநிலைப் படுத்துவதென்றும் இந்திய சர்க்காருக்குத் தற்போது சாத்தியமில்லை என்றும் மத்திய விவசாய மந்திரி பஞ்சாப்ராவ் தேஷ்முக் கூறியிருக்கிறார்.

தார்வாரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் மேலும் பேசினர்:—

"தானிய விலைவாசிகள் எல்லாம் சரிந்து விழாமல் ஒரே அளவில் நிலைநிறுத்தும் திட்டங்களை, திட்டக் குழுவும், நிதியமைச்சரும் ஆதரிக்கவில்லை. தானியப் பொருட்களை விலைக்கு வாங்குபவர்களின் நன்மைகளையும் பாதுகாக்கவேண்டியது அவசியமாகிறது. மாநில சர்க்காரின் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் திட்டக் குழுவின் கொள்கைகளைப் பின்பற்றியவைகளேயாகும். எனவே, நிலச்சுவான்களும் அவற்றை எதிர்க்காமலிருப்பதே நல்லது. ஜனநாயக நாட்டில் மக்கள் விருப்பம் போலவே தான் யாவும் நடக்கும்; சர்க்காரும் அதற்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கும்."

## இங்கல்ல—அங்கே!

சென்ற ஆண்டில் (1954) மத்திய பாரத் மாநிலத்தில் 403 கொலைச் சம்பவங்கள், 200 கொள்ளைகள், 126 திருட்டுக் குற்றங்கள் நடைபெற்றனவாம்!

மேலும், பிந்த் மொரேனு ஆகிய மாவட்டங்களில் இருந்துவரும் கொள்ளைக் கூட்டத்தினருக்கும் போலீசாருக்குமிடையே அடிக்கடி கைகலப்புகள் ஏற்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டுள்ளன.

# ‘புதிய நாடகச் சட்டத்தை ரத்து செய்க’

## ‘தமிழை ஆட்சி மொழி ஆக்குக’

## மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

### அனுதாபம்

சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த காலத்திலிருந்து—திராவிட முன்னேற்றக் கழகமாகத் தழைத்துள்ள இதுநாள் வரை கொள்கைக்காகவே தூய்மையான பணியாற்றியதோடல்லாமல் வழிகாட்டியாகவுமிருந்துவந்த நமது மாவீரர் சவுந்திரபாண்டியனார் அவர்கள் இயற்கையெய்தியமைக்கும், மதுரை மாவட்ட முதல் மாநாட்டின் தொண்டராயிருந்து பணியாற்றிய இளந்தாடி கோபால் அவர்களின் மறைவுக்கும் இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

★

### வஜா செய்க!

மதுரை மாவட்டம்—திருமங்கலத்தில், இவ்வாண்டு பருவமழை சரிவரப் பெய்யாததால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆட்சி பீடத்தினருக்கு இம்மாநாடு எடுத்துக்காட்டுவதுடன், அவர்களின் வரியை அதாவது 1364-ம் பசலிக்கு வரியை வஜா செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

—சந்தானம்
—உசிலைத்தம்பி

★

### ஆவன செய்க!

தொழில் துறையில் மிக மிக பாதிக்கப்பட்டுள்ள நம் மாநிலத்தில்—சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளைப் பயன்படுத்த தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் வற்புறுத்திப் பேசின தென்னாட்டு உறுப்பினர் அனைவரையும் பாராட்டுவதுடன், டெல்லி ஆட்சி பீடத்தினர், எவ்வகையிலும் இம்முக்கிய பிரச்சினையை வீணான வாதங்களைக் கூறி தட்டிக் கழிப்பதற்கு இடமளிக்காமல், சேலத்தில் இரும்பு தொழிற்சாலையை அமைப்பதற்கு, பாராளுமன்றத்திலுள்ள சென்னை மாநில உறுப்பினர்களும், சென்னை அரசியலாரும், பொது மன்றங்களும் ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—எஸ். ஆர். சந்திரன்
—சேலம் ஈ. ஆர். கிருஷ்ணன்

★

### ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்க!

சென்னை அரசியலார், தங்கள் ஆட்சி மொழியினை தமிழாக ஏற்று அதை நடைமுறையிலும் கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—எம். எஸ். ராமசாமி
—அரசுக் கண்ணன்

★

### கைவிடுக

மதுரை திடீர் நகரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சிறு குடிசைகள் அமைத்து வாழ்ந்துவரும் ஏழை மக்களை — அப்புறப்படுத்த வேண்டுமென்று சர்க்கார் கொண்டுள்ள திட்டத்தைக் கைவிடுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கொள்வதுடன், திடீர் நகரத்தில் சுகாதார வசதிக்கேற்ப ரோடுகள், தண்ணீர் வசதி ஆகியவைகளைச் செய்து தர வேண்டுமென்று மதுரை மாவட்ட ஆட்சி மன்ற நிர்வாகத் தலைவரான கலெக்டர் அவர்களையும், மாவட்ட ஆட்சி மன்றத்தினரையும், சென்னை அரசியலாரையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—எஸ். முத்து
—திண்டுக்கல் சமதர்மம்

★

### ரத்து செய்க!

நாடகக் கலை மூலம் நாட்டிலே முற்போக்குக் கருத்துக்கள் வளர்ந்து வருவதைக் காணும் சில வர்ணாசிரமிகளின் கூப்பாட்டுக்கு அஞ்சி, ஜனநாயகப் பண்பை அறவே மறந்து நாடகத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ள சென்னை அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(அ) எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும், கலைஞர்களின் மனக்கொதிப்பையும், குறிப்பாகப் பொது மக்களின் கண்டனங்களையும் நாள்தோறும் கண்டுவரும் சென்னை அரசியலார் — நாட்டிலே அமைதி நிலவவேண்டும் என்ற முக்கிய குறிக்கோளை எண்ணியாவது நாடகத் தடை சட்டத்தை உடனே ரத்து செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

—ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
—முகவை ஆர். எஸ். பாண்டியன்
—கலைத்தூதன்

★

### அறிவுறுத்துக!

வடநாட்டு முதலாளித்துவ சுரண்டல் தன்மையின் சின்னங்களில் ஒன்றாயிருந்துவரும் டால்மியாபுரம் என்ற பெயரை கல்லக்குடியாக மாற்றவேண்டுமென, திராவிட முன்னேற்றக் கழகம் அப்போராட்டத்தின் மூலமும், நம் நாட்டிலுள்ள சிற்றூர்—நகர, ஆட்சி மன்றங்களும் மற்றுமுள்ள பொது மன்றங்களும், குறிப்பாகப் பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது ஒருமித்த கருத்தைத் தெரிவித்திருந்துங்கூட இதுநாள்வரை ‘கல்லக்குடி’ என அதிகாரபூர்வமாக மாற்றி அமைக்க முன்வராத டெல்லி ஆட்சி பீடத்தினரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், சென்னை அரசியலார் இப்பிரச்சினையை குறித்து டெல்லி ஆட்சி பீடத்தினருக்கு அறிவுறுத்தி விரைவில் ஆவன செய்யவேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்தி நினைவூட்டுகிறது.

—திருச்சி எம். எஸ். மணி
—வசனப்பித்தன்

★

### வசதி செய்து தருக!

வடநாட்டுஅகதிகளின்பிரச்சினை குறித்து அவ்வப்போது தக்க கண்காணிப்பும், பாதுகாப்பும் அளித்துவரும் டெல்லி ஆட்சியாளர், இலங்கை வாழ் திராவிடரின் அவல நிலை குறித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் வாயிலாகவும், கண்டனங்களின் மூலமும் அறிவித்திருந்தும் அதைப் பொருட்படுத்தாத நேரு சர்க்காரின் மனப்பான்மையை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், விரைவில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்ப இருக்கும் ஐயாயிரம் தமிழர்களுக்கு இந்த நெருக்கடியான நிலையிலாவது தக்க பாதுகாப்பும், வசதியும் செய்து தர டெல்லி ஆட்சி பீடத்தினரை சென்னை அரசியலார் வற்புறுத்த வேண்டுமென்று இம்மாநாடு நினைவூட்டுகிறது.

—இரா. சு. தங்கப்பழம்
—ஏ. வி. பி. ஆசைத்தம்பி
—சி. பி. சிற்றரசு

### நடைமுறையில் கொண்டு வருக!

சென்னை மாநிலத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள், தங்களின் அவலநிலை குறித்து ஆட்சி பீடத்தினரிடம் எடுத்துக் கூறியும், கிளர்ச்சி செய்ததற்கும் ஏற்ப, பஞ்சாலைத் தொழிலாளரின் நிலையை நேரில் அறிந்து ஆவன செய்ய, சென்னை அரசியலாரே நியமித்த முக்கூட்டுக் குழுவின் தீர்ப்பைக் கூட இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வராமல், தொழிலாளரின் சாதாரண உரிமையையும் பறித்துவரும் மில் முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளித்துவரும் சென்னை அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், சென்ற திங்கள் 21-ம் நாள் நாடெங்கும் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளரின் அடையாள வேலை நிறுத்தத்தின் ஒருமித்த கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வகையிலாவது உடனே முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசுகளை நடைமுறையில் கொண்டு வர சென்னை சர்க்கார் முனைய வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—தூத்துக்குடி எஸ். நடராசன்
—அன்பில் தர்மலிங்கம்

★

### அமைதி காக்க தலையிடுக!

மதுரை ஆர்வி மில்லில் சமீப காலமாக, டன்லப் பழைய மில், பத்து சயிட் இவ்விரண்டு இடங்களிலும் மூன்று பேர் பார்த்து வந்த வேலையை இருவர் செய்ய வேண்டுமென்று மில் நிர்வாகிகள் வற்புறுத்தி வருகின்றனர். இதனால் அத்தொழிலாளரிடையே மனக்கொதிப்பு ஏற்பட்டிருப்பதால் நிலைமையை அமைதியாக முடிக்க சென்னை சர்க்கார் தலையிட்டு முன்போலவே தொழிலாளர்களின் எண்ணிக்கை இருக்குமாறு செய்ய இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது

—நல்லமாயன்
—நிலக்கோட்டைகாத்தான்

★

### வாபஸ் பெறுக!

மூன்று பேர்களும் அதற்குக் குறைவாகவும் வர்த்தக குமாஸ்தாக்கள் இருக்கும் கடைகளுக்கு ஷாப் சட்டத்திலிருந்து சென்னை அரசியலார் ஓராண்டு காலத்துக்கு விதிவிலக்களித்திருப்பதானது பல்லாயிரக்கணக்கான வர்த்தக குமாஸ்தாக்களுக்கு பாதகமான முறையில் இருப்பதால் மேற்படி விதிவிலக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்படி உத்திரவை வாபஸ் பெறும்படி சென்னை அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தலைவர்—

★

### காலதாமதம் செய்யாதீர்!

1. மொழிவழி மாநில அமைப்புப்படி, திருவாங்கூர்—கொச்சியில் இணைக்கப்பட்டுள்ள ஒன்பது தமிழ் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று, திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை நடைபெற்ற மாநாடுகளில் வலியுறுத்திக் கூறி வந்துள்ளதை மீண்டும் இம்மாநாடு டெல்லி ஆட்சியினருக்கு வலியுறுத்தி நினைவூட்டுகிறது.

(அ) திரு—கொச்சித் தமிழர்கள் தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று அமைதியான முறையில் கிளர்ச்சி நடத்தியதை இம்மாநாடு மிக மிகப் பாராட்டுவதுடன், அந்த அறப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைச் சுட்டு வீழ்த்தியும், சிறையில் அடைத்தும் கொடுமை செய்த பட்டம் தாணு சர்க்காரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், சிறை தண்டனை அனுபவித்து வரும் அறப்போர் வீரர்களையும், வழக்குத் தொடுத்துள்ள நூற்றுக் கணக்கானவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்து வழக்குகளையும் வாபஸ் பெறுமாறு திரு—கொச்சி சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) பல கட்சிக் கொள்கைகள் கொண்ட ஆந்திர மக்கள், ஆந்திர மாநிலம் சென்னையிலிருந்து பிரிய வேண்டுமென்று டெல்லி மத்திய ஆட்சிபீடத்தினருக்கு நினைவூட்டி தெளிவுபடுத்தி பிரிந்ததுபோல, தமிழக மக்கள் தங்களது பல அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலான மொழிவழி மாநில பிரிவினையை மாநில புனரமைப்புக் குழுவினரிடம் அறிவித்துள்ளதை டெல்லி மத்திய ஆட்சியினரும், அனைத்திந்திய காங்கிரஸ் குழுவினரும், மேலும் காலதாமதம் செய்யாமல் உடனடியாகத் தமிழக, கேரள, கன்னட, ஆந்திரப் பகுதிகளின் எல்லைகள் இன்னின்னவை என நிர்ணயிக்க வேண்டுமென டெல்லி ஆட்சியினரையும் அதனின் மறைமுக சக்தியான காங்கிரஸ் கட்சியினரையும் இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

—மேட்டுப்பாளையம் சன்முகநாதன்
—இரா. நெடுஞ்செழியன்

## கோழிகளுக்கும் அந்த நிலையா?

இந்திய சர்க்கார், தங்களது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தியா பூராவிலுமுள்ள எல்லா மாநிலங்களிலும், கோழிகள் அபிவிருத்திக்கென 150 நிலையங்களை அமைப்பதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறது.

இந்தியாவில் தற்போது கிடைத்துவரும் கோழி முட்டைகளைக் கணக்கிடுகையில், ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு 4 முட்டைகள் வீதம்தான் கிடைக்கின்றனவாம்.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலுள்ள கோழிகளுக்கும் வாத்துக்களுக்கும் முட்டையிடும் சக்தியும் கூடக் குறைவானதாகும்.

சாதாரணமாக அயல்நாடுகளிலுள்ள கோழிகளெல்லாம் ஆண்டொன்றுக்கு சுமார் 120 முட்டைகளிடுகின்றபோது, இந்தியாவிலுள்ள கோழிகளோ 53 முட்டைகள் வரையிலும்தான் இடுகின்றன.

## மிரளுகிறீர்?

“இந்தியாவின் உணவுப் பிரச்சினை, மிகக் குறுகிய காலத்திலேயே தீர்ந்துவிட்டது. ஆனால் இப்போது மற்றொரு பெரும் பிரச்சினை எழும்பிக் கொண்டிருக்கிறது. மக்கள் தொகை வரவர வெகு தீவிரமாக அதிகரித்துக் கொண்டு வருவதே அந்தப் பிரச்சினையாகும்; திரு-கொச்சி மாநிலத்தில் மக்கள் தொகை அதிகரித்துவிட்டிருப்பதுதான் அங்கேயுள்ள அரசியல் கட்சிகள் சர்க்காருக்கு அதிகமான தொல்லைகள் கொடுத்து வருவதின் காரணமாகும்.”

இவ்வாறு, ஆலப்புழையில் (திரு-கொச்சி) நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், கர்னாடக பிரதேச காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா கூறினார்.

## உங்கள் குறிப்புக்கு:

ஒரிசாவில் மகாநதியின் குறுக்கே கட்டப்படும் ஹீராகுட் அணை 15,748 அடி நீளமுள்ளது. மண், காங்கிரீட், சுண்ணாம்பு, செங்கல் ஆகியவற்றினால் இந்த அணை கட்டப்படுகிறது. ஆற்றுப் படுகை மதகுகள் 64 இருக்கும். அணைக்கட்டின் இடது கரையோரம் 32,275 அடி நீளமிருக்கும். வலது கரையோரம் 35,500 அடி நீளமிருக்கும். அணை, அணைக்கரை ஆகியவற்றின் மொத்த நீளம் 16 மைல் ஆகும். இத்திட்டத்துக்காக, இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை—கடன் பொறுப்புகள் நீங்கலாக, 55,14,000 ரூபாயாகும்.

## இளைஞர்களுக்கு அழைப்பு

“நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும், குறைந்த அளவு 8 குழந்தைகளாவது இருக்க வேண்டும். நமது நாட்டின் மக்கள் தொகை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பெருகுகிறதோ அந்த அளவுக்கு நமது நாடும் பலம் பெறும்; தற்சமயத்தில் 20-கோடி மக்களைப் பெற்றுள்ள நம் நாட்டில், மேலும் 10 கோடி மக்கள் சேர்ந்துவிட்டாலும் கூட, நமது நாடு மீண்டும் சிறியதுதான்; ஏனெனில், நம் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் கூடுதலான மக்கள் தொகை அவசியமாகும்,”

என்று ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளர் இளைஞர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், மணமே செய்து கொள்ளாமலிருக்கும் பிரம்மச்சாரிகள், பிள்ளைப் பேறில்லாத குடும்பங்கள், குடும்ப விருத்தியில்லாதவர்கள் ஆகியோருக்குத் தண்டனையாக அபராதம் விதிப்பது நியாயமே என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மத்திய ஆசியா, சைபீரியா, சோவியத் தூரக் கிழக்குப் பிரதேசங்கள் ஆகியவற்றை யெல்லாம் திருத்தி அமைப்பதற்கான பெரும் பெருந் திட்டங்களெல்லாம் இருப்பதாகத் தெரிவித்துவிட்டு, அவர், இளைஞர்களெல்லோரும் கிழக்குப் பகுதிகளில் சென்று அங்குள்ள நிலங்களை யெல்லாம் திருத்திப் பண்படுத்தி, உழுது பயிர் செய்து குடும்ப வாழ்க்கை நடத்தவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## பற்றாக்குறை

மதுரை, ஜன. 8—

இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் 1955—56-ம் ஆண்டிற்கான வரவு - செலவு (பட்ஜெட்) கணக்கில் ரூ. 15 இலட்சத்து 9 ஆயிரம் பற்றாக்குறை காணப்படுகிறதாம்.

இந்த ஆண்டு (1955—56) வரவு - செலவுக்கான கணக்குப்படி, இந்த ஆண்டின் மொத்த வருமானம் ரூ. 26 இலட்சத்து 60 ஆயிரம் என்றும், ஆனால் மொத்தச் செலவுத் தொகையோ 33 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

## வெளியேறுகின்றனர்

சூடான் மராமத்து இலாகாவில் பணியாற்றி வந்த பிரிட்டிஷ் சிப்பந்திகளில் பெரும்பான்மையினர் தங்கள் வேலைகளை ராஜினாமாச் செய்துவிட்டனர். இவர்களையும் சேர்த்துக் கணக்கிடுகையில், இதுவரை சூடானிலிருந்து 600 பிரிட்டிஷார் தங்கள் தங்கள் பதவிகளையும் வேலைகளையும் இராஜினாமாச் செய்துவிட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. வேலையை விட்டுப் போன எல்லா பிரிட்டிஷாருக்கும் பதிலாகச் சூடானியர் அந்தந்த இடங்களிலமர்ந்து பணியாற்றுகின்றனர் என்று கூறப்படுகிறது.

சூடானில் மொத்தம் 1,344 பிரிட்டிஷார் வேலை செய்து வருகின்றனராம்.

## சட்டத்தை மீறிய வடநாட்டு நிறுவனம்

### ரூ. 3,500 வரை அபராதம்

கோவை, ஜன. 10—

சர்க்கரை வியாபாரிகளின் அனுமதி (லைசென்ஸ்) சட்டத்தையும், சர்க்கரை, வெல்லம் ‘கண்ட்ரோல்’ உத்திரவையும் மீறியதாக, இங்குள்ள வடநாட்டுச் சர்க்கரை வியாபாரிகள் நிறுவனம் ஒன்றின் சிப்பந்திகளுக்கும் பங்குதாரர்களுக்கும் ரூ. 25 முதல் 3,200 வரை அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அபராதத் தொகைகள் யாவும் செலுத்தப்பட்டுவிட்டனவாம்.

# சென்னையில் திராவிடர் திருநாள்

**14—1—55** பகல் **1** மணிக்கு சேத்துப்பட்டு எம். சி. டி. திடலில் (சேத்துப்பட்டு ரயில் நிலையத்துக்கருகில்) கழகத் தோழர்களின் விளையாட்டுப் போட்டிகளும், தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களின் கயிறிழுப்புச் சண்டையும் நடைபெறும்.

மாலை **5** மணிக்கு, எழும்பூர் அழகிரி திடலில் (டி. பி. ஆஸ்பத்திரி பின்புறம்) முன்னாள் சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. கோவிந்தசாமி தலைமையில் மாபெரும் கலைவிழா, சிறுவர்களின் சித்திரப் போட்டி, குழந்தைகளின் அழகுப் போட்டி, இசைக்குயில் மதுரை பி. எஸ். செல்வா—இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோரின் இசை விருந்து, கிளைக் கழகங்களின் நாடகக் காட்சிகள் முதலியவை நடைபெறும்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் விழாவில் கலந்துகொள்வர்.

*குறிப்பு: விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கும் தோழர்கள் விழாவன்று சேத்துப்பட்டு எம். சி. டி. திடலில் பகல் 1 மணிக்கு வந்து கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

—சென்னை மாவட்ட தி.மு.கழகம்

# தமிழகத்தில் திராவிடர் திருநாள்

★

### சென்னை

13—1—55 மாலை 6 மணிக்கு, சென்னை, சேத்துப்பட்டு, ஆரிங்டன் சாலை(பச்சையப்பன் கல்லூரி அருகாமை)யில், வ. உ. சி. இளைஞர் கழகச் சார்பில், தோழர் நாஞ்சில் கி. மனோகரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், திருக்குறள் முனுசாமி, எம்.பி., ஆகியோர் பேசுவர்.

* * *

13—1—55 மாலை 5 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி, எண் 9, சுப்பராயச் செட்டித் தெருவில், முன்னணிக் கழகச் சார்பில், தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர் மா. கோவிந்தராசன் பேசுவார்.

* * *

14—1—55 அன்று, சென்னை 44-வது வட்ட தி மு. கழகச் சார்பில், சென்னை, மயிலாப்பூர், எண் 2, அரங்கநாதபுரம் தெருவில், தோழர் வி. குப்புசாமி தலைமையில், காலை 7-30 மணிக்கு கொடியேற்றுதலும், 8 மணிக்கு சிறுமிகளின் கோலாட்ட விளையாட்டும், 9 மணிக்குமேல் சொற் பயிற்சிக் கூட்டமும், 11 மணிக்கு ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றுதலும் நடைபெறும்.

* * *

14—1—55 அன்று, சென்னை 50-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் சென்னை, எண் 5, விஸ்வலிங்க செட்டி முதல் வீதியில், காலை 6 மணிக்கு ம. சோ. நெடுமாறன் அவர்களால் கொடியேற்றுதலும், 7 மணிக்கு பொங்கல் விநியோகமும், 8 மணிக்கு இன்னிசையும், 10 மணிக்கு வாழ்த்துரையும் நடைபெறும். 10-30 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு சென்னை மாவட்ட திராவிடர் திருநாள் கூட்டத்தில் கலந்துகொண்டு 'சரியா-தப்பா?' என்ற நாடகம் நடத்தும். ஊர்வலத்தில் 44-வது வட்ட கழகத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

* * *

14—1—55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை, தொண்டையார்பேட்டை, எண் 217, டி. எச். ரோடில், தோழர் டி. சண்முகம், எம்.எல்.ஏ., முன்னிலையில் ஏழைகளுக்குக் கஞ்சி கொடுக்கப்படும்.

* * *

14—1—55 அன்று, வட சென்னை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில், காலை 8 மணிக்குச் சிறுவர்களுக்கு பொங்கல் வழங்கப்படும். காலை $11\frac{1}{2}$ மணிக்கு தோழர்கள் எம். எஸ். இ. மாயில், பி. எம். இராமையா ஆகியோர் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு சென்னை மாவட்ட தி. மு. கழகம் நடத்தும் திராவிடர் திருநாள்விழாவில் கலந்துகொள்ளும். ஊர்வலத்தில் வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றத்தாரும் கலந்துகொள்வர்.

### மூஞ்சூர்பட்டு

13—1—55 மாலை, மூஞ்சூர்பட்டியில் தி மு. கழகக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. ஏ. இளஞ்செழியன், வல்லாளன் ஆகியோர் பேசுவர்.

★

### கணியூர்

14—1—55 மாலை 7 மணிக்கு, கணியூர் புதூர் மடத்தில், கணியூர் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும். தோழர் இரா. சு. தங்கப்பழம் பேசுவார்.

★

### திருப்பூர்

14—1—55 அன்று, திருப்பூர் வள்ளுவர் திடலில், திருப்பூர் நகர தி. மு கழகச் சார்பில் நடைபெறும். தோழர் விருதை ந. ராமசாமி, மற்றும் பலர் பேசுவர்.

★

### பொன்மலை

14—1—55 காலை 10 மணிக்கு, பொன்மலை-மேலக்கற் கண்டார் கோட்டை தி. மு கழகச் சார்பில், கழகக்கட்டிடத்தில் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

★

### துத்திக்குளம்

14—1—55 அன்று, துத்திக்குளத்தில், துத்திக்குளம் அண்ணா நாடகக் குழுவினரால், தோழர் மு. கருணாநிதி தீட்டிய 'நச்சுக் கோப்பை' நாடகம் நடைபெறும். தோழர்கள், தோழியர்கள் பலர் பங்கேற்பர்.

★

### உண்ணாமுலைசமுத்திரம்

14-1-55 மாலை, உண்ணாமுலை சமுத்திரத்தில் தி மு கழகக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. ஏ இளஞ்செழியன், ஏ. கருத்தோவியன், மணி எழிலன் ஆகியோர் பேசுவர்.

# மாறுவேடத்தின் 'மகிமை?'

விருதுநகர், ஜன. 11—

இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவரான திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள், சில தினங்களுக்கு முன்னர், மாறுவேடமணிந்துகொண்டு மாவட்டக் கழகத்தினர் நடத்தும் பள்ளிகளுக்குச் சென்று சோதனையிட்டார் என்று கூறப்படுகிறது.

அவர், அங்குள்ள ஆசிரியர்களிடம் கேள்விகள் பல கேட்டார் என்றும், அக்கேள்விகளுக்குச் சரியாகப் பதிலிறுக்காத ஆசிரியர்களும், கழகச் சுற்றறிக்கை விதிகளின்படி நடந்துகொள்ளாத ஆசிரியர்களும் 'வேலை நீக்கம்' செய்யப்பட்டிருக்கின்றனரென்றும் தெரிகிறது. மற்றும் சில ஆசிரியர்கட்கு 'நோட்டீஸ்' கொடுத்திருக்கிறாராம்.

# பொதுச்செயலாளர் அண்ணாதுரை பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'தபால்கார'ராக—இங்குள்ள நிலைகளை அங்கு தெரிவிப்பவராக—காமராசர் இருந்தால் போதுமானது.

**'டால்மியாபுரத்தை கல்லக்குடி என்று மாற்றுங்கள்,' என்று காமராசர் நேருவிடம் கூறலாம்.**

**'டால்மியா கோபித்துக் கொள்வாரே,' என்று நேரு கூறினால், உடனே காமராசர், 'உங்களுக்கென்ன தெரியும், இங்குள்ள நிலைமைகள்; ஒருவர் கோபிப்பார் என்பதற்காகப் பலரின் கோரிக்கையைப் புறக்கணிக்கலாமா?—என்று கேட்கவேண்டும்.**

இப்படி நாட்டு நிலைகளை அவரது தலைவர்களிடம் தெரிவிக்கும் தபால்காரர் பணியினைக் கூடவா காமராசர் செய்ய முடியாது?"

இவ்வாறு கேட்டுவிட்டு, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், திருச்சியில் இரண்டாண்டுகளுக்கு முன்புநடைபெற்ற உழவர் மாநாட்டில், முதன் மந்திரி ஓமந்தூராரும், அவரும் கலந்துகொண்டபோது, ஓமந்தூரார் அவர்கள், 'எல்லாம் சரி, அண்ணாதுரை; திராவிட நாடு பெறவேண்டுமானால், உன்னிடம் கப்பல் படையில்லை; விமானப் படையில்லை; இராணுவம் இல்லை; இவை எல்லாம் இல்லாத நீ, இவைகளை வைத்துக்கொண்டிருக்கிற வடநாட்டவரிடம் எப்படிப் போராடி திராவிட நாடு பெறமுடியும்? எனவே முதலில்படைகளைத் தயாரித்துக்கொண்டு பிறகு பார்க்கலாம்,' என்று கூறியதாயும், அதற்கு அண்ணாதுரை அவர்கள், 'இந்தப் படைகளை, நாம் விரும்பினால் கூட அவற்றை வைத்துக் கொள்ள இயலாது; இந்தப் படைகளை வைத்துக் கொள்ளும் அதிகாரம் வடநாட்டவர்களிடமே இருக்கிறது,' என்று எடுத்துக் காட்டியதையும் குறிப்பிட்டு, பொதுச் செயலாளர் அவர்கள், "ஓமந்தூராருக்கோ, காமராசருக்கோ அரசியல் புரிந்திருப்பது அவ்வளவுதான்," என்றார்.

### நியாயமானது

"நமது இலட்சியம் வெகு நியாயமான கோரிக்கையைக் கொண்டது; வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு, நாட்டு நிலைகளை எடுத்துக் காட்டி, நாம், நமது நாடு நமக்காக வேண்டுமென்கிறோம்; நமது கோரிக்கை நமது பிறப்புரிமையாகும்; அந்த உரிமையை, மிகச் சாதாரணமானவர்களாகிய நாம் எப்படிப் பெறப்போகிறோம்—நிலைநாட்டிக் கொள்ளப் போகிறோம்—என்று கேட்கிறார்கள் சிலர். அவர்களுக்குச் சொல்லுகிறேன் — நாம் மிகச் சாதாரணமானவர்கள்; சாமானியமானவர்கள்தான்; அதனால்தான் கேட்கிறோம் — நமக்கு சுதந்திரம் வேண்டுமென்று!

### சாமானியர்கள்தாம்!

மறந்துவிடக் கூடாது — இப்போது நடப்பது சாமானியர்கள் யுகம் என்பதை! பாமரர்கள் பாராளும் காலமிது என்பதை!

எனவே, கழகத் தோழர்கள் நல்ல பண்புகளுடன் கழகத்தினை வளர்க்கவும், கழக வேலைகளில் வேகமாக ஈடுபடவும், வேலையிலீடுபடுகையில் மிகுந்த ஆர்வத்துடனும், ஆனால் ஆர்ப்பாட்டமின்றியும் பணி புரிந்து, இலட்சியத்தை அடையப் பணி புரியக் கேட்டுக்கொள்கிறேன்."

---

ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், அண்மையில் திறந்துவைத்த கங்குவால் மின்சார உற்பத்தி நிலயத்தில், 48,000 கிலோவாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

# 10,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

### போலீசார் நடவடிக்கையில் பலர் கைது

கல்கத்தா, ஜன. 12—

கல்கத்தாகூட்டுக் கப்பல் கம்பெனித் தொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற வேலை நிறுத்தம் மேலும் மேலும் வலுத்துக் கொண்டே வருவதாக செய்திகள் அறிவிக்கின்றன.

நேற்று, சுமார் 10,000 தொழிலாளர்கட்கு மேற்பட்டவர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டனராம்!

இதன் காரணமாக, துறைமுகத்தில் தேங்கி நிற்கும் கப்பல்களின் எண்ணிக்கையும் 250-ஆக உயர்ந்து விட்டிருக்கிறதாம்.

கப்பல் தொழிலாளிகளின் இவ்வேலை நிறுத்தத்திற்குத் தங்கள் ஆதரவைக் காட்டும் வகையில் சுமார் 500 படகுக்காரர்கள், ஊர்வலமாக மாநில முதலமைச்சர் விடுதிக்குச் சென்று, தொழிலாளர் யூனியனின் பொதுச் செயலாளரை விடுவிக்கக் கோரிக் கொண்டனராம்.

இதனால், கல்கத்தா, அசாம், மற்றுமுள்ள கடற்கரையோர தொழிலாளர்களனைவரும் பாதிக்கப்பட்டு விட்டனர் என்றும், கல்கத்தா துறைமுகத்தில் நின்று கொண்டிருக்கின்ற கப்பல்களையெல்லாம், தம் வசமாக்கிக் கொள்வதற்காக, போலீசார் 7 கப்பல்களில் இருந்த 47 பேர்களைச் கைது செய்து விட்டிருக்கின்றனரென்றும் தெரியவருகிறது.

# விடுதலை பெற்றும் உயிர் வாழவில்லை!

நாகர்கோவில், ஜன 11—

தி. த. நா. கா. வழக்குகளின் எதிரிகளில் ஒருவரான திருத்துவபுரத்தைச் சேர்ந்த 22 வயதுள்ள எஸ். மரியதாஸ் என்பவர் கடந்த 3-ந் தேதியன்று இயற்கையெய்தினார் என்று தெரிகிறது.

நோய் வாய்ப்பட்டு காவலில் இருந்த அவர் விடுதலை செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்றும் கூறப்படுகிறது.

# முன்னாள் அமைச்சர் தாக்கப்பட்டார்!

காட்மண்ட், ஜன 11—

நேபாள காங்கிரஸ் நடத்திவரும் சத்தியாக்கிரகம் காரணமாக, இங்கு 18 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், முன்னாள் நேபாலி அமைச்சரான சுத்மான் சிங் என்பவர் ஒரு கோஷ்டிக் கூட்டத்தாரால் பலமாகத் தாக்கப்பட்டார் என்றும், போலீஸ்காரர் ஒருவரும் காயமுற்றார் என்றும் தெரியவருகிறது.

# பக்ரா கால்வாய் - ஊழல் வழக்குகள்

அம்பாலா, ஜன. 10—

பக்ரா கால்வாய் ஊழல் வழக்குகள் சம்பந்தமாக சப்-டிவிஷனல் அதிகாரி ஒருவர், வதீரா சப்-டிவிஷனைச் சேர்ந்த 3 ஓவர்சியர்கள், ஒரு கண்டிராக்டர், ஒரு குமாஸ்தா ஆக 6 பேர், விசேட போலீஸ் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பொய்க் கணக்குகள் தயாரித்து சர்க்காரை ஏமாற்றுவதற்கான சதிச் செயல்களில் ஈடுபட்டதாக இ.பி.கோ. 409, 109 ஆகிய பிரிவுகளின் கீழ் சப்-டிவிஷனல் அதிகாரியான சர்தார் சந்தோக் சிங் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரை கர்னல் மாவட்டத்திற்கு மாற்றிவிடுவதற்கான உத்திரவு ஒன்றிற்கு மாஜிஸ்திரேட் அனுமதி தந்துள்ளார்.

லஞ்சம் வாங்கியதாகவும், பொய்க்கணக்குகள் தயாரிக்க அதிகாரிக்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு மற்ற ஐந்து பேரும் 'ரிமாண்டி'ல் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

# கைதிகள் கலவரம்

### மேசை, நாற்காலிகள் பறந்தன

அர்ஜெண்டைனாவிலுள்ள மிகப் பெரிய சிறைகளில் ஒன்றான ஆல்மோஸ் சிறைச்சாலையில், கைதிகள், கடந்த வெள்ளியன்று ஆரம்பித்த ஒரு கலகம் இன்னமும் முடிவுறவில்லையாம்.

அங்கே காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள், மேசை, நாற்காலி, இன்னும் தங்கள் கைகளில் கிடைத்த பொருட்களை எல்லாம் எடுத்து, சிறைச்சாலைச் சிப்பந்திகள் மீது வீசியெறிந்து தாக்குதல் நடத்தினராம்.

சிறைக் கதவுகளும், சாளரங்களும் தகர்த்தெறியப்பட்டன என்றும், கைதிகள் சிறைச்சாலைக்கே தீவைக்க முயற்சித்தனர் என்றும் கூறப்படுகிறது.

நிலைமையைச் சமாளிக்க ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ துருப்புகளும், போலீசாரும், தீயணைக்கும் படையினரும், சிறை அதிகாரிகளின் முறையீட்டிற்கிணங்க சிறைச்சாலைக்கு வந்தனராம்.

இந்தக் கலவரத்தின்போது கைதிகளில் ஒருவர் கொலையுண்டார் என்று தெரிய வருகிறது.

# முந்திரி எண்ணெய் தொழிற்சாலை

### கடலூரில் நிறுவப்படும்!

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் தாலூகாவில், 25,000 ஏகருக்கு மேற்பட்ட நிலங்களில் விளைகின்ற முந்திரி எண்ணெய் தயார் செய்வதற்கென ஒரு தொழிற்சாலை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒரு லட்சம் ரூபாய் செலவில், கூட்டுறவு அடிப்படையில் இத்தொழிற்சாலை அமைக்கப்படுமென்றும், இந்தத் தொகையில் ரூ, 23,000 இயந்திரச் சாதனங்களுக்கும், கட்டிடத்திற்காக 78,000 ரூபாயும் செலவிடப்படலாமெனவும்,சுமார் 8 லட்ச ரூபாய் அத்தொழிற்சாலையின் நடப்பு மூலதனமாக இருக்கலாமெனவும்கூறப்பட்டுள்ளது.

### வெல்ல ஏற்றுமதி: இந்திய சர்க்கார் அனுமதி

கரும்பு வெல்ல ஏற்றுமதியை மீண்டும் ஓரளவுக்கு அனுமதிக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இம்முடிவுப்படி இந்திய வெல்ல வகையில் 20,000 டன்னும், சென்னை மாநில வகையில் 5,000 டன்னும், ஆந்திர மாநில வகையில் 5,000 டன்னும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என்று தெரிகிறது.

### அடியோடு ஒழியாதாம்!

குறுக்கெழுத்துப் போட்டிகளை எல்லாம் அடியோடு ஒழித்துவிடாமல், பரிசுத் தொகைகள் மட்டும் கட்டுப்படுத்தப்படுமென்றும், இந்த முறையிலேயே மத்திய சர்க்கார் சட்டமியற்றுவரென தாம் நம்புவதாகவும் சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

---

1954-ம் ஆண்டின் இறுதிவரையில் சர்வதேச நாடுகளின் பாங்கி, 36 நாடுகளுக்கு 205 80 லட்சம் டாலருக்கு மேல் கடனுதவி அளித்திருக்கிறதாகக் கூறப்படுகிறது. சென்ற ஆண்டில் மட்டும் (1954) இந்தியா உட்பட 15 நாடுகளுக்கு அது 23.27 கோடி டாலர் கடன் உதவி செய்திருக்கிறதாம்!

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,